மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

# Theatre for Development: Psychosocial work through theatre for children of war-affected families in Northern Sri Lankan

Thevanayagam Thevananth

**Ph.D. Research Scholar, Department of Journalism and Communication, University of Madras, India**

Manuscript ID : **MT75A0085**

Volume : **2**

Issue : **4**

Month : **December**

Year : **2022**

Received: 29.10.2022
Revised: 04.11.2022
Accepted: 10.11.2022
Published: 14.11.2022

Pages : 69-82

DOI: 10.5281/zenodo.7372390

This work is licensed under a Creative Commons Attribution-NonCommercial-ShareAlike 4.0 International (CC BY-NC-SA 4.0) International License

OPEN ACCESS

**ABSTRACT:**

Sri Lanka's civil war has created many forms of tragedy. The most important of which continues to this day is that of the disappearance problem, Over the past thirty years, tens of thousands of North East Tamil family members have been forcibly disappeared. They engage in continuous protests on the streets demanding answers to the disappearance of their relatives. It remains an unsolved problem to this day. The families of the missing continue to suffer. The Northern Sri Lankan Tamil community has been facing such a situation for the last thirty or forty years. In particular, there is a need to continue working on the psychological development of war-affected children. During the period 1997/1998 when people started re-settling in their own places after the Jaffna displacement, NGOs formed children's clubs for the psycho-social development of the affected children. A Thunivu (Courage) play prepared for such an activity is researched here. The drama consoled the children by expressing the emotional distress of families who lost their fathers and lost family members. It is studied on the basis of the Applied Theatre Concept for psychosocial development.

**KEYWORDS:**

Applied Theatre, Psychosocial Issues, Wartime Theatre Activities, Missing Persons in Sri Lanka, Sri Lankan Civil War

# அபிவிருத்திக்கான அரங்கு: யுத்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சிறுவர்களுக்கான அரங்கினூடான உளசமூகப்பணி

**தேவநாயகம் தேவானந்த்,**
*முனைவர்பட்ட ஆய்வாளர்,*
*இதழியல் மற்றும் தொடர்பியல் துறை, சென்னைப்பல்கலைக்கழகம், இந்தியா*

## கட்டுரைச் சுருக்கம்

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் பல வகையான அவலங்களை உருவாக்கியிருக்கிறது. அதில் மிக முக்கியமானது இன்று வரை தொடர்வது காணாமால் ஆக்கப்பட்டவர்களின் பிரச்னை. கடந்த முப்பது வருடங்களில், பல்லாயிரக்கணக்கான வடக்கு கிழக்குப்பகுதி தமிழ் குடும்ப உறுப்பினர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். தமது உறவுகள் காணாமல் போனதற்கு பதில் வேண்டும் என்று கேட்டு வீதிகளில் தொடர் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். இன்று வரை தீர்க்கப்படாத பிரச்னையாகத் தொடர்கிறது. காணாமல் போன குடும்பங்கள் தொடர்ந்து உள நெருக்கீட்டுக்குள்ளாகி வருகிறார்கள். இவ்வாறான நிலைமையை கடந்த முப்பது, நாற்பது வருடங்களாக வடஇலங்கைத் தமிழ்சமூகம் எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உள விருத்திக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டியுள்ளது. யாழ்ப்பாண இடம்பெயர்வின் பின்னர் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேறத் தொடங்கிய 1997 / 1998 காலகட்டத்தில் இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளசமூகவிருத்திக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சிறுவர் குழுக்களை அமைத்து செயற்பட்டு வந்தன. அவ்வாறானதொரு செயற்பாட்டுக்காகத் தயாரிக்கப்பட்ட துணிவு நாடகம் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது. இந்த நாடகம் தந்தை காணாமல் போன மற்றும் குடும்ப அங்கத்தவர்களை இழந்த குடும்பங்களின் உளப்பிரச்னையை வெளிப்படுத்தி சிறுவர்களை ஆற்றுப்படுத்தியிருந்தது. பிரயோக அரங்க முறைமை அடிப்படையில் இது ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றது.

## கருச்சொற்கள்

பிரயோக அரங்கு, உளசமூகப்பிரச்னைகள், யுத்தகால அரங்கச் செயற்பாடுகள், இலங்கையில் காணாமல் போனோர் பிரச்னை, இலங்கை உள்நாட்டுப் போர்

## முன்னுரை

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் பல வகையான அவலங்களை உருவாக்கியிருக்கிறது. அதில் மிக முக்கியமானது இன்று வரை தொடர்வது காணாமால் போனவர்கள் பிரச்னை. கடந்த முப்பது வருடங்களில், பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் குடும்ப உறுப்பினர்கள் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் (M. Salih and G. Samarasinghe, 2017). தமது உறவுகள் காணாமல் போனதற்கு பதில் கேட்டு வீதிகளில் தொடர் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். அந்தப்பிரச்னை தீர்க்கப்படாத பிரச்னையாக தொடர்கிறது. காணாமல் போன குடும்பங்கள் உள நெருக்கீட்டு பிரச்னைக்கு தொடர்ந்து ஆளாகி வருகிறார்கள். இவ்வாறான நிலைமையை கடந்த முப்பது, நாற்பது வருடங்களாக வடஇலங்கைத் தமிழ்சமூகம் எதிர்நோக்கி வருகின்றது. குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உள விருத்திக்காக தொடர்ந்து பணியாற்ற வேண்டியுள்ளது. யாழ்ப்பாண இடம்பெயர்வின் பின்னர் மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேறத் தொடங்கிய போது இவ்வாறு பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உளசமூகவிருத்திக்காக சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் மற்றும் ஜி.ரி.சட், யுனிசெப் நிறுவனங்கள் சிறுவர் குழுக்களை அமைத்து செயற்பட்டு வந்தன அப்போது சிறுவர்களின் உளசமூகப்பணிக்காக அரங்கைப் பயன்படுத்தும் பணியில் நான் இணைந்து செயற்படும் வாய்ப்புக்கிடைத்தது. இதன் பின்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் உளசமூக மேம்பாட்டுப் பணியை தொடர்ந்து மேற்கொள்ள முடிந்தது. இந்தக்காலகட்டத்தில் சிறுவர்களின் உளசமூக மேம்பாட்டுக்காகத் தயாரிக்கப்பட்டு மேடையேற்றப்பட்டது துணிவு என்ற நாடகம். அந்த நாடகம் நிஜக்கதையை மிருகங்களைப் பாத்திரங்களாகக் கொண்ட சிறுவர் கதையாக உருவகப்படுத்தி சிறுவர் நாடகப் பாணியில் சொல்ல முற்பட்டிருக்கிறது. இதனை குறியீட்டு நாடகப்பாணியெனவும் குறிப்பிட முடியும். அதாவது சில குறியீடுகள் சில நபர்களில் ஆழ்ந்த உணர்ச்சிகரமான பதிலைத் தூண்டும் திறன் கொண்டவையாக காணப்படுகின்றன. அதாவது எண்ணங்கள், உணர்வுகள், செயல்கள் மற்றும் சூழ்நிலைகள் அல்லது வடிவங்களாக ஒரு குறியீடு உருவாக்குகிறது. அதாவது, ஒரு குறியீடு உணர்ச்சியைத் தூண்டி செயலைத் தூண்டுகிறது. (Carl G. Jung>1977)

“உளசமூகவியல்” என்ற சொல் உணர்ச்சி, உளவியல், ஆன்மீகம், சமூக உறவு, அரசியல் செயல்முறைகள், தனிப்பட்ட, குடும்பம் மற்றும் சமூக மட்டங்களில் உள்ள நிலைமைகள் தொடர்பான முன்னோக்குகள், சிக்கல்கள், அர்த்தங்கள் மற்றும் பரிசீலனைகளைக் குறிக்கிறது. இந்த வரையறையானது பரந்த அளவிலான மனித திறன்கள், பின்னடைவு, கலாச்சாரம், சமூகம், பொருள் நல்வாழ்வு மற்றும் அரசியல் ஆகியவை தனிநபர்கள், குடும்பங்கள் அல்லது சமூகங்களின் உளவியல் நிலையில்

வகிக்கும் பங்கை உள்ளடக்கிய விடயங்களை குறிக்கிறது. (M. Salih and G. Samarasinghe, 2017)

அரங்கு வாழ்க்கையின் பிரதிநிதித்துவம், வாழ்க்கையின் ஒரு துண்டு, அல்லது பார்வையாளர்களுக்கு முன்பாக வாழ்க்கையை விபரிக்கிறது என்று குறிப்பிடப்படுகிறது. இந்த அரங்கு மனிதனின் உருவாக்கம் முதலே உள்ளது. (Wilson, 1994) உரையாடல் மற்றவர்களுடன் தொடர்புகொள்வதற்கான தூண்டுதல் அனுபவத்தைப் பகிர்ந்துகொள்வது மற்றும் பிறரிடம் எதிர்வினையைத் தூண்டுவது ஆகியவை நாடகத்தின் அடிப்படை கூறுகள், இந்த கூறுகள் படைப்பு முதல் மனிதனிடம் உள்ளன.

நாடகப் படைப்பாக்கச் செயல்முறை உளசமூகப்பணிக்கான ஒரு சிறந்த செயற்பாடாகும் என்பது இலங்கை வடபகுதியில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரங்கினூடாக நடைபெற்ற உளசமூகப்பணிகள் சுட்டிக்காட்டுகின்றன. ஒரு சமூகத்தில் சமூகப் பிரச்சனைகள் மற்றும் பாகுபாடுகள் வலுவான அரசியல் தாக்கங்களைக் கொண்டிருக்கும் சூழ்நிலைகளில், கலைச் செயல்பாடுகள், குறிப்பாக நாடகம் சிறப்பு மதிப்புடையவையாகச் செயற்பட முடியும். (சபா. ஜெயராசா, 2005)

ஏனெனில் அவை குழுவில் ஆக்கப்பூர்வமான தொடர்புக்கும், அரசியல் அர்த்தத்தில் சமூக தொடர்புக்கும் இடையே ஒரு உறவை உருவாக்குகின்றன. இந்த குறிப்பிட்ட விடயத்தில், நாம் வாழும் மக்களிடையே சமூக உணர்வை மீண்டும் உருவாக்க இது உதவ முடியும்.

யுத்த சூழ்நிலை காரணமாக எமது சிறார்களின் உடல்விருத்தி, மனவெழுச்சி விருத்தி, சமூக விருத்தி முதலியவற்றில் உள்ள குறிப்பிட்ட பின்னடைவுகளை மீட்டெடுப்பதற்குரிய எட்டிப்பிடிக்கும் திட்டங்களை முன்வைக்க வேண்டியுள்ளது. (சபா. ஜெயராசா, 2005)

ஆற்றுப்படுத்தற் பணியின் தேவை இன்றைய சமூகச் சூழலில் அதிகமாகிக் கொண்டுவருகின்றது. குறித்துரைக்கப்பட்ட பயனாளிக் குழுக்களுடன் இயங்கி அரங்கவியலாளர்கள் பல்வேறு நிலைப்பட்ட பணிகளை ஆற்றுப்படுத்தும் செயற்பாடுகள் ஊடாக முன்னெடுப்பதில் சிறப்பாக பங்களிக்க முடிகின்றது. அரங்கு சார்ந்த திறன்கள் இச்செயற்பாடுகளின் வினைத்திறனுக்கு நல்ல வாய்ப்புக்களைத் தருகின்றன. வளம் செய்கின்றன. குறித்த பிரச்சினையை பொதுவாக கொண்ட குழுவினருடன் செயற்பட்டு, ஆற்றுப்படுத்த வேண்டிய நிலைகளில் அப்பிரச்சினை மீது வெளிச்சம் போட்டு காட்டுவதாகவும், அதன் வழி பிரச்சினையின் தெளிவான வரைபை பயனாளிகளிடம் ஏற்படுத்துவதாகவும், தீர்வை நோக்கிய முனைப்பு கொள்வதாகவும் என்றால் வேறுநிலைகளிலும் அரங்கச் செயற்பாடுகள் ஆற்றுப்படுத்தல் நிலையை

எடுத்து கொள்ளுகின்றன. இந்த வகையான, பலர் ஒரே நிலையில் பயனடைய முடிகிறது. (சிவகுமார், 2004)

தொன்னூறுகளின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் உளசமூகப்பணி என்ற புதிய சொற்பதம் அறிமுகமாகிறது. சுனாமிக்குப் பின்னர் உளசமூகப்பணி மேலும் விரிவடைந்தது. இந்தச் செயற்பாட்டில் சந்தோசம் களமெங்கும் பரவி நிற்கும், பிள்ளை சுறுசுறுப்பாக விருக்கும், புரிந்து கொள்ளும் ஆற்றல் பெருகும், ஓர் ஒழுங்கில் அசைய அல்லது இயங்கக் கற்றுக்கொள்வார்கள், அவதானிக்கும் ஆற்றல் வளரும், ஞாபகம் அதிகரிக்கும், தொடர்புபடுத்திப்பார்க்கும் ஆற்றல் மேலோங்கும், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு அதிகரிக்கும், சேர்ந்து கூட்டாக இயங்கும் பழக்கம் உணர்ச்சிகளை கொடுத்து வாங்கும் பண்பு என்பன அதிகரிக்கும். (தேவானந்த், 2007)

சமூகத்துடன் ஆக்கபூர்வமான தொடர்பை ஏற்படுத்த அரங்கினூடான உளசமூகப்பணி வழிவகுகின்றது. இதனால், தனிநபரின் சீர்திருத்தத்திற்கு வழி பிறக்கும். இது, சமூக தொடர்புப் பயிற்சிக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. (சபா. ஜெயராசா, 2005)

இலங்கையில் தொன்னூறுகளின் தொடக்கத்தில் கலாநிதி நான்ஸிபரன் என்ற அமெரிக்க உளவியலாளர் இலங்கைக்கிழக்குப் பகுதியில் யுத்தத்தில் காணாமல்போன குடும்பங்களுடன் பணியாற்றிக் கிடைக்கப்பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் ‘ஒரு குட்டியானை துணிவு’ பெறுகிறது என்ற கதைகொன்றை உருவாக்கி அந்தக்கதையை கதை சொல்லல் ஊடகமாகப் பயன்படுத்து பாதிக்கப்பட்ட சமூகத்தின் ஆற்றுப்படுத்தல் பணியைச் செய்தார். குறிப்பாக, ஆண்கள் காணாமல் போன குடும்பங்களின் சிறுவர்களின் உளசமூக மேம்பாட்டுக்காகப் பணியாற்றியிருந்தார். ஆங்கிலத்தில் அவர் எழுதிய கதையை பேராசிரயர் கா. சிவத்தம்பி தமிழில் மொழிபெயர்த்திருந்தார்.

இது இலங்கை வடகிழக்கில் காணாமல்போன குழந்தைகளின் குடும்பங்களின் உளசமூகப்பணிக்கு பெரிதும் உதவியாக விருந்தது. இதே காலகட்டத்தில் அரங்கச்செயற்பாட்டுக் குழு (ஆரம்பம் 1997) நாடக அரங்கக்கல்லூரி (ஆரம்பம் 1978) சார்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் பின்னர் செயல் திறன் அரங்க இயக்கம் (ஆரம்பம் 2003) சுனாமி பாதித்த பகுதிகள் மற்றும் யுத்தம் பாதித்த பகுதிகளின் சிறுவர்கள் பெண்கள் ஆகியோரிடன் பணியாற்றிய அனுபவத்தின் அடிப்படையாக உளசமூகப்பணிக்காக அரங்கைப்பயன்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடைபெற்றன.

## ஆய்வு முறையியல்

இந்த ஆய்வு பிரயோக அரங்கக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆய்வாளரே பங்குபற்றுனராகவும், வழிநடத்துனராகவும் இருந்த அடிப்படையில்

சுயஇனவரைவியல் பார்வையில் தகவல்கள் திரட்டப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அபிவிருத்திக்கான அரங்கு என்பது சமூகங்களின் மேம்பாட்டுக்காக அரங்கை பயன்படுத்துவதற்கான ஒரு புதிய வழியாகும். தனிநபர்கள் அல்லது சமூகம் முழுவதுமாக மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கங்களுக்காக சமூக அணிதிரட்டல், கல்வி, விழிப்புணர்வு, உணர்திறன் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றிற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படும் ஒரு கலையாகும். (Asiama, 2001)

அரங்கு சமூக மேம்பாட்டிற்கான ஒரு வழியைக் காண்கிறது, அங்கு சமூக உறுப்பினர்கள் தங்கள் சொந்த பிரச்சினைகளை அடையாளம் காணும் வாய்ப்பைப் பெறுகிறார்கள். விவாதங்கள் மற்றும் ஆலோசனைகள் மூலம் அவற்றைச் சமாளிப்பதற்கான உத்திகளை வகுக்கிறார்கள். அபிவிருத்திக்கான நாடகத்தை உருவாக்குபவர்கள் நாடகத்தை பாடல்கள், ஊமங்கள், நடனங்கள் மற்றும் உரையாடல்களைப் பயன்படுத்தி நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துகிறார்கள். (Mda, 1993)

அபிவிருத்திக்கான அரங்கு மகிழ்விக்கிறது அதேவேளை கல்வியை அறிவை வழங்குகின்றது. (Salhi, 2000).

இந்த ஆய்வு ஆய்வாளர் தான் வாழ்ந்த நெருக்கடியான சூழலின், சிறுவர்களின் உளசமூக மேம்பாட்டுக்காக தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட்ட தனது சொந்த அனுபவங்களில் அடிப்படையாக கொண்டு தான் வழிப்படுத்தி நெறிப்படுத்திய நாடகத்தை ஆய்வு செய்கிறார். இதில் சுயஇனவரைவியல் ஆய்வுமுறை ஊடாக தகவல்களைச் சேகரிக்கிறார். சுயஇனவரவியல் என்பது ஆராய்ச்சி மற்றும் எழுத்துக்கான அணுகுமுறையாகும், இது கலாச்சார அனுபவத்தை (ethnos) புரிந்து கொள்வதற்காக தனிப்பட்ட அனுபவத்தை (auto) விவரிக்கவும், முறையாக பகுப்பாய்வு செய்யவும் முயல்கிறது. (ELLIS, 2000; HOLMAN JONES, 2005)

## பிரயோக அரங்காக ‘துணிவு’ நாடகம்

‘துணிவு’ என்ற நாடகம் உளவியலாளரான நான்சிபரன் என்பவரது குட்டி யானைக் கதையைத் தழுவி எழுதப்பட்டது. உளவியலாளரான நான்சிபரன் என்பவரது குட்டி யானைக் கதையை துணிவு நாடகமாக தேவானந்த் தயாரித்தார். இது ஒரு உளவியல் நாடகம். சிறுவரை இலக்குப்பார்வையாளராகக் கொண்டு மேடையேற்றப்பட்டது. பல இழப்புக்களைச் சந்தித்த சிறுவர்கள் அந்த இழப்பைத் தாங்குவதற்கான மனத்துணிவை இந்த நாடகத்தினூடாகப் பெற்றனர். (ஜோன்சன் ராஜ்குமார், 2005)

அரங்கு உணர்ச்சியை ஊடுகடத்தும் ஓர் வடிவம். அரங்கப்படைப்பாக்கத்தில் ஈடுபடுகின்றவர்கள் இடர்களின் தாக்கத்தை உணர்ந்து கொள்ளுதல் முக்கியம்.

துணிவு என்ற சிறுவர் நாடகம் தந்தையை இழந்து துயருறும் பச்சைப்பாலகர்களுக்கும் அம்மாமார்களுக்கும் சுமைத்தணிவை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க உளவியலாளரான நான்சிபரன் எழுதிய கதையைத் தழுவி எழுதப்பட்டது. மட்டக்களப்பில் இராணுவத்தால் கொல்லப்பட்ட தந்தையின் இழப்பை புரிந்து கொள்ள முடியாத பிள்ளையை மைப்படுத்தி இந்தக்கதை எழுதப்பட்டது. (தேவானந்த், 2004)

கடந்த காலத்தில் யுத்தத்தின் விளைவுகளை வெளிப்படுத்தியும், விளைவுகளுக்கு முகம் கொடுத்தும், ஆற்றுப்படுத்தியும் சிறுவர் அரங்கு நகர்ந்து வந்துள்ளது. அது அரங்கச்செயற்பாடுகளாக, நாடகங்களாக, இரண்டும் இணைந்தவையாக, பல்வேறு தளங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. (ஜோன்சன் ராஜ்குமார், 2005)

துணிவு நாடகம் சிறுவர் பார்வையாளர்களுக்காகத் தயாரிக்கப்பட்டது. யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முதல்முதலில் தயாரிக்கப்பட்டது. இந்த பாடசாலையில் படிக்கும் மாணவர்கள் நகருக்குள் உள்ள சேரிப்புறத்தில் வாழ்பவர்கள், அவர்களில் பலர் யுத்தத்தில் நேரடியாகப்பாதிக்கப்பட்டவர்கள். பின்னர் இந்த நாடகம் கடற்கரைக்கிராமமான கொழும்புத்துறையில் சிறுவர் கழகத்திற்காக தயாரிக்கப்பட்டது. இங்கும் கடற்றொழிலாளர்கள் பலர் யுத்தகாலத்தில் கடலில் காணாமல் போயும், இறந்தும் போனார்கள்.

நாடகத்தின் பாத்திரங்களான கதை சொல்லும் சிறுவன், வேடுவர்கள் இவர்களுக்கிடையில் நடைபெறும் உரையாடலாக நாடகம் ஆரம்பமாகிறது. சிறுவர்களுக்கு வேடுவர்கள் கதைசொல்ல முற்படுகிறார்கள். அதுவொரு யானைக்கதை சொல்கிறார்கள். ஒருகாட்டில் மிருகங்கள் மகிழ்ச்சியாக இருக்கின்றன. கோடைகாலத்தில் கடும் வரட்சி நிலவுகிறது. உணவுத்தட்டுப்பாடு ஏற்படுகிறது. மிருகங்களுக்கிடையில் சச்சரவு ஏற்படும். அதனை அந்த அப்பா யானை தீர்த்து வைக்கும். காட்டில் மிருகங்களுக்கு உதவிசெய்வார். அப்பா யானைக்கு அழகான ஒரு குடும்பம் இருக்கிறது. மகன் குட்டியானை, அம்மா யானை காணப்படுகிறார்கள்.

ஒரு நாள் மிருகங்கள் எல்லாம் சிதறி ஓடுகின்றன. காட்டில் ஒருவன் தானே பெரியவன் என்று சொல்லி காட்டுக்கு தீ வைத்து விடுகிறான். தீயில் அகப்பட்டு மிருகங்கள் அவதிப்படுகின்றன. இதனைக் கேட்ட அப்பா யானை மிருகங்களைக் காப்பாற்ற காட்டின் நடுப்பகுதிக்குள் செல்கிறது. அப்போ தன்வயிற்றில் குட்டி யானையைச் சுமக்கும் அம்மா யானையையும் குட்டியானையையும் ஓர் இடத்தில்

இருக்குமாறு சொல்லி, குட்டி யானையை “அம்மாவை கவனமாகப் பாரத்துக்கொள்”; என்று சொல்லி செல்கிறது.

**அப்பா**: கரடியாரே எல்லோரும் ஏன் ஓடுகிறீர்கள்? காட்டில் என்ன சத்தம் கேட்கிறது. ஏதாவது அசம்பாவிதமா?

**கரடி**: ஆம் யானையாரே அங்கே ஒருத்தன் தானே பலவானவனாம், தனக்கே எல்லா உரிமையும் என்று சொல்லிக் காட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டான். காடே தீப்பற்றி எரிகிறது. பலர் தீயில் கருகி இறந்து விட்டார்கள்.

**அப்பா**: காடு வரட்டு கிடப்பதால் நான் உடனே காட்டுக்குப் போக வேண்டும். அங்கு பலருக்கு எனது உதவி தேவைப்படும். அங்கு பலர் உயிருக்குப் போராடுவார்கள். நான் கட்டாயம் அங்கு போக வேண்டும்.

**பாப்பா**: அப்பா நீங்கள் எப்ப திரும்பி வருவீர்கள்?

**அப்பா**: நான் இருட்ட முதல் வந்திடுவன் கண்ணா. உன்னை நம்பித்தான் அம்மாவையும் விட்டுட்டுப் போறன். கவனம் கண்ணா அம்மாவை கவனமாப்பார்த்துக் கொள்.

இப்போ, காட்டில் தீ ஓய்துவிடுகிறது. இருந்தாலும் அப்பா யானை மீண்டும் தன்குடும்பத்திடம் வரவில்லை.

**குட்டி யானை**: அம்மா, இன்னும் காட்டில் சத்தங்களும் கரும்புகையும் தெரியுது. அப்பாவும் அங்கேயே அம்மா நிற்பார். அம்மா, அப்பா காட்டில் இன்னும் நின்றால் அவரும் நெருப்பில் அகப்படமாட்டாரா?

**அம்மா**: இல்ல கண்ணா, அவர் நல்லவர். வீரர், அவருக்கு ஒன்றும் நடக்காது. அவரைக் கடவுள் காப்பாற்றுவார். அவருக்காக இறைவனைப்பிராத்திப்போம்.

இவ்வேளை வேடுவர் காடு எரிந்து கொண்டிருக்கும் போது அப்பா யானைக்கு நடந்ததை விபரிக்கிறார்கள்.

**வேடன்**: காட்டில் மிருகங்களுக்கு உதவி செய்ய ஓடோடிப்போன அப்பா யானை, மிருகங்களுக்கு உதவிசெய்து கொண்டிருக்கும் போது எரிந்து கொண்டிருந்த மரமொன்று முறிந்து விழுந்ததால் துடி துடித்து மரணமானார்.

இதனைக் கேட்டு அம்மா யானை கவலையடைகிறது குட்டியானையால் அப்பா மரணமடைந்ததை புரிந்து கொள்ள முடியவில்லை. அப்பா திரும்பி வராததால் குட்டியானையும், அம்மாயானையும் உணவின்றி தவிக்கிறார்கள்.

நடந்ததை மீண்டும் மீண்டும் பாடலாகவும் உரையாடலாகவும் பார்வையாளருக்கு சொல்லுவதாக நாடகம் கட்டமைக்கப்பட்டுள்ளது.

**குட்டி யானை:** அப்பாவை இரண்டு நாளாகக் காணவில்லை. அம்மா சாப்பாடு இல்லாமல் பலவீனமாக இருக்கிறார். நான் என்ன செய்யலாம்.? ஆ..அம்மா நான் காட்டுக்குப்போய் உணவு தேடிக்கொண்டு வாரன்.

**அம்மா:** வேண்டாம் மகனே, உன்னையும் பிரிந்து என்னால் இருக்க இயலாது. காடு ஆபத்து நிறைந்தது.

**குட்டி யானை:** அம்மா நான் காணாமல் போக மாட்டன். ஆபத்தில்லாத பாதை வழியாகப் போய் உணவு தேடி வருவன்.

இப்போ வயிற்றில் குட்டியைச் சுமக்கும் அம்மா யானையால் உணவுதேடிப்போக முடியவில்லை. குட்டியானை தனியே உணவு தேடிப்போகிறது. அதற்கு இதற்கு முன் உணவு தேடிப்பழக்கம் இல்லை. அது வழிநெடுக காண்பவர்களிடம் உதவிகோருகிறது. அவர்களால் யானைகள் என்ன உணவு சாப்பிடும் என்று தெரியாமல் குட்டியானைக்கு உணவு தேடிக்கொடுக்க சிரமப்படுகிறார்கள்.

முதலில் குட்டியானை நாரையைக் காணுகிறது அதனிடம் தனக்கு உணவு தேடித்தருமாறு கேட்கிறது. நாரை தான் சாப்பிடும் மீனை பிடித்துக் கொடுக்கிறது. அதற்கு

**குட்டி யானை:** ஐயையோ... யானைகள் மீன் சாப்பிடுவதில்லை.

பின்னர் குரங்கைச்சந்தித்து உணவு தேடித்தருமாறு கேட்கிறது. ஒவ்வொருவரையும் சந்திக்கும் போதும் தனக்கு நடந்தவற்றை சொல்கிறது. பின்னர் பாடல்கள் குட்டியானையின் நிலையை விளக்குகின்றன. குரங்கார் உதவிசெய்ய முடியாது என்று சொல்லி போய்விடுகிறது. அதன் பின்னர் குட்டி யானை மானைச்சந்திக்கிறது. மானிடம் உதவி கேட்கிறது. மான்கள் தங்கள், தங்கள் உணவு இருக்கும் இடத்துக்கு செல்ல வேண்டும் என்று சொல்கின்றன. அதற்காக தங்கள் பின்னே ஓடிவருமாறு சொல்கின்றன. குட்டியானை அவர்கள் பின்னே ஓட முடியாமல் தனித்து நிற்கிறது.

இந்த வேளை நாரை குட்டியானை இருக்கும் இடத்திற்கு ஓடிவந்து யானைகளின் உணவிருக்கும் இடத்துக்கு குட்டி யானையை அழைத்துச் செல்கிறது. அங்கு, ஒரு யானைக் கூட்டம் காணப்படுகிறது. அவர்களிடம் குட்டியானையை நாரை அறிமுகம் செய்கிறது. அவர்களிடம் தனது அப்பா பற்றி குட்டி யானை கேட்கிறது.

**குட்டி யானை**: காடு எரிந்து கொண்டிருக்கும் போது மிருகங்களுக்கு உதவ காட்டுக்குப் போன எனது அப்பா இரு நாட்களாகத் திரும்பவில்லை. மாமா, மாமி எங்கட அப்பா உயரமாக கம்பீரமாக இருப்பார். அவரைக் கண்டனீங்களா?

**மாமா யானை**: ஆம், அடர்ந்த காட்டில் மூன்று நாட்களுக்கு முன் அவரைக்கண்டேன். உன் அப்பா பெரிய வீரர் காட்டுப் பூனைகளைக்காப்பாற்றிக் கொண்டிருந்த வேளை தீடீரென மரங்கள் முறிந்து விழுந்தன. மகனே உனது அப்பா இறந்து விட்டார். சண்டையும் நெருப்பும் அவரை சாகடித்து விட்டன.

**குட்டி யானை**: நெருப்பும், சண்டையும் இப்போதைக்கு ஓய்ந்து விட்டனவா?

**மாமா யானை**: ஆம் இப்போதைக்கு ஓய்ந்து விட்டன.

**குட்டி யானை**: அப்படியானால் நான் உடனே வீட்டுக்கு போக வேண்டும். அப்பா வீட்டுக்கு வந்துவிடுவார்.

**மாமி யானை**: ஐயோ மகனே உனது அப்பா இறந்து விட்டார். அவர் இனி உங்களிடம் வரமாட்டார்.

**வேடன்**: அப்பா இறந்து விட்டார் என்பதை குட்டி யானையால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

**குட்டி யானை**: அப்பா, மாமி எனது பிறந்த நாள் கொட்டாட்டத்திற்கு வரத்தானே வேணும்.

**மாமா யானை**: இல்லை கண்ணா. உன் அப்பா இனிமேல் உன்நினைவுகளில் மட்டும் தான் வருவார்.

**குட்டி யானை**: மாமா நினைவு என்றால் என்ன?

**மாமா யானை**: உன்கண்களை மூடிக்கொள். உன் அப்பாவின் உருவத்தை நினைத்துக்கொள். அவருடன் மகிழ்ச்சியாக, இன்பமாக கழித்த நேரங்களை எண்ணிப்பார்

குட்டியானை கண்களை மூடி தான் அப்பாவுடன் மகிழ்ச்சியாகவிருந்து கணங்களை நினைத்துப் பார்க்கிறது.

**குட்டி யானை**: அப்பாவும் நானும் ஒருநாள் காட்டுக்குள் உலாவச்சென்றோம். அங்கே ஒரு நீர்வீழ்ச்சி அப்பா நிற்கிறார் கூட நானும் இருக்கிறேன். அப்பா என்னை நீர்வீழ்ச்சிக்கு கீழ் கொண்டு சென்கிறார். மகிழ்ச்சி என்றால் அது தான் மகிழ்ச்சி, நான் அப்பாவினுடைய முதுகிலிருந்து தவறி விழப்பார்த்தேன். அப்பா என்னைக்காப்பாற்றினார். அப்பா சிரித்தவாறே ரொம்ப மகிழ்ச்சி கண்ணா உன்னைப்

போல் ஒரு மகன் கிடைக்க என்ன தவம் செய்தேனோ தெரியாது, நான் மிக்க அதிர்ஷ்டசாலி என்றார்.

இந்தக் காட்சி நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்களை கண்கலங்க வைக்கும். ஒரு வகையான காதாஸிஸ் நிலை இங்கு காணப்படும். கூட்டுக் கழிவிரக்க நிலையடைந்து இழப்பை ஏற்றுக் கொள்ளச் செய்வதாக இந்த நிகழ்வைப்பார்க்கலாம்.

**குட்டி யானை**: மாமா என்னுடைய அப்பா திரும்பி வரமாட்டாரா?

**மாமா யானை**: இல்லைக் கண்ணா

**குட்டி யானை**: ஆனால் சில சமயம் என் கண்களை மூடிக்கொண்டால் அப்பாவை மீண்டும் காணலாம் தானே? குட்டி யானை அப்பா, அப்பா என்று விம்மி அழுகிறது.

இவ்வேளை நாரை அம்மாவை யானைக் கூட்டங்களிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. இப்போ அம்மாவும் குட்டியானை அருகே வந்து சேர்கிறார்.

**மாமி யானை**: பாப்பா அம்மா வந்திட்டா, உன் அப்பாவுக்கு எல்லோருமாகச் சேர்ந்து ஒரு மரணச்சடங்கு நடத்துவோம்.

**குட்டி யானை**: மரணச்சடங்கு என்றால் என்ன?

**மாமி யானை**: அப்பாவையும் அவரது கருணை உள்ளத்தையும் நாம் எல்லோரும், விரும்பினோம். பாராட்டினோம். அதனால் அவருக்கு நன்றியும் பிரியாவிடையும் செய்வது தான் மரணச்சடங்கு

அப்பா யானைக்கு மரணச்சடங்கு நடக்கிறது.

**குட்டி யானை**: அம்மா! நான் அழுதால் நீ தேற்று, நீ அழுதால் நான் தேற்றுவேன். நாங்கள் இருவரும் துணிவோடு வாழுவோம் என்பதாக நாடகம் முடிகிறது.

## முடிவுரை

குட்டியானை துணிவு பெறுகின்றது என்ற நாடகம் தமது தகப்பனை சிறுவயதில் இழந்த, பிள்ளைகளின் உளநலனைக்கருத்திற்கொண்டு எழுதப்பட்ட ஒரு கதை. குறிப்பாக இலங்கை கிழக்குப்பகுதியில் சிங்களவர்களும், தமிழர்களும் சேர்ந்து வாழும் பகுதிகளில், எல்லைக்கிரமங்களில் நடைபெறும் மோதல்களின் போது பலர் காணாமல் போனார்கள். இவ்வாறு காணாமல் போனவர்கள் பலர் இளம் உழைக்கும் குடும்பத்தலைவர்கள். சில குடும்பத்தலைவர்கள் காணாமல் போகும் போது அவர் மனைவி வயிற்றில் குழந்தை வளர்ந்து வந்து கொண்டிருக்கும். அவரது முகத்தைக்

காணாமலே அந்தக் குழந்தை வளர வேண்டியதாக இருக்கும். அவ்வாறான குழந்தைகளின் உளப்பிரச்னை தந்தையை நேரில் காணாத அடிப்படையில் இருக்கும். சில நேரங்களில் குழந்தைகளின் முன்னே அழைத்துச்செல்லப்படும் அப்பா பின்னர் வரமாட்டார். இவ்வாறான சூழலில் குடும்பத்தலைவனை இழந்தவர்கள் அதிலிருந்து மீண்டு தமது வாழ்க்கையை வாழ வேண்டும் என்பதை இந்தக் கதை வலியுறுத்துகிறது.

கதையின் கருப்பொருள் இலங்கையின் உள்நாட்டுப் போரை குறியீடாகச் சுட்டிக்காட்டுகிறது. பெரும்பான்மையினர் தமக்கானது நாடு என்கின்றதான நிலையில் சிறுபான்மையினர் துன்பப்படுகிறார்கள் என்பதை நாடகம் வெளிக்காட்டுகிறது. அதாவது கரடி என்ற பாத்திரத்தின் உரையாடல் இதனை விளக்குகிறது எனலாம்.

**கரடி**: ஆம் யானையாரே அங்கே ஒருத்தன் தானே பலவானவனாம், தனக்கே எல்லா உரிமையும் என்று சொல்லிக் காட்டுக்கு நெருப்பு வைத்துவிட்டான். காடே தீப்பற்றி எரிகிறது. பலர் தீயில் கருகி இறந்து விட்டார்கள்.

குட்டியானை துணிவு பெறுகிறது என்ற கதை பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு கதை சொல்வதற்காகவே எழுதப்பட்டது. அதனை வடக்கின் தேவையைக் கருத்திற்கொண்டு உள ஆற்றுப்படுத்தல் தேவைக்காக சிறுவர் நாடகப்பண்புகளோடு தயாரித்து பல இடங்களில் மேடையேற்றியிருந்தோம்.

இங்கு கதையிலும் நாடக்காட்சிகளிலும், ஆற்றுப்படுத்தலுக்காக பின்வரும் விடயங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

1. சிறுவர்களிடம் தந்தைக்கு நடந்த விடயத்தை மறைக்கத் தேவையில்லை. நடந்ததை புரியும் படியாக சொல்ல வேண்டும். இதனால் நாடகத்தில் பல தடவைகள் 'உங்கள் அப்பா இறந்து விட்டார், திரும்பி வரமாட்டார்' என்று கூறப்படுகின்றது. பல குடும்பங்களில் இவ்வாறு காணாமல் போய் இறந்ததாக அறிந்தும் பிள்ளைகளிடம் உண்மையைச்சொல்லாமல் மறைப்பது நடக்கிறது. 'அப்பா வெளிநாடு போய்விட்டார் சிறிது காலத்தின் பின் வருவார்' என்று நம்பிக்கை அளிப்பதாக சொல்லப்படுவதை நாம் பார்த்திருக்கிறோம் அது தவிர்க்கப்பட வேண்டும் என்பதை நாடகம் வலியுறுத்துகிறது.
2. ஒவ்வொருவரும் தனக்கு நடந்ததை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் அதனை ஒழித்து மனதுக்குள் வைக்கத் தேவையில்லை. அவ்வாறு பகிர்வதால் மன ஆறுதல் கிடைக்கிறது என்பதும் சொல்லப்படுகின்றது.
3. அப்பா இல்லாது வாழ்வதற்கு சிறுவர்கள் தயாராக வேண்டும், புதிதாக கற்றுக்கொள்ள வேண்டும். என்பதை வெளிப்படுத்துவதாக பாப்பா யானை நாரையாருடன் உணவு தேடிப் போவது அதில் தோல்வி அடைவது, பின்னர்

குருங்காருடன், மானாருடன் உணவு தேடமுயற்சிப்பது என்று இறுதியில் உணவிருக்கும் இடத்தை அடைவது சுட்டிக்காட்டப்படுகிறது. சிறு சிறு முயற்சிகளால் வெற்றியடைய முடியும் என்பது சொல்லப்படுகின்றது.

4. இழப்புக்களின் போது உறவினர்களுடன் இருப்பது உள ஆற்றுப்படுத்தலுக்கு உதவும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. குட்டி யானை, அம்மா யானை, மாமா மாமி யானைகளுடன் இணைவது ஆறுதல் தருவதாக கூறப்படுகின்றது.
5. ஒருவரின் இழப்பை அவரது நினைவுகளை மீட்டுப்பார்பதன் மூலம் நினைவுகூருவது சிறந்தது. அது ஆரோக்கியமானது என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது.
6. பண்பாட்டிலிருக்கின்ற முறைப்படி ஒரு மரணத்திற்கான சடங்குகளைச் செய்வது மன ஆறுதலாக இருக்கும் என்பதும் நாடகத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது.
7. குடும்பத்தில் ஒருவர் இறந்து விட்டால் ஏனையவர்கள் தமக்குள் துயரங்களையும் மகிழ்ச்சிகளையும் பகிரப்பழக வேண்டும். மனதுக்குள் அமுக்கிவைத்திருக்க முடியாது என்ற தகவலும் நாடகத்தின் கடைசியில் சொல்லப்படுகிறது "அம்மா! நான் அழுதால் நீ தேற்று, நீ அழுதால் நான் தேற்றுவேன். நாங்கள் இருவரும் துணிவோடு வாழுவோம்." என்ற வரிகள் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

இவ்வாறு யுத்தகாலத்தில் ஏற்பட்ட அவலங்களிலிருந்து மீள்வதற்கான ஆற்றுப்படுத்தல் பணியை சிறுவர் நாடகப்பாணியில் துணிவு நாடகம் செய்திருக்கிறது. இருந்தாலும் வடக்கில் பல குடும்பங்களில் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல், அதாவது அவர்கள் இறந்து விட்டார்களா? இருக்கிறார்களா? என்பது தெரியாமல் உள்ள குடும்பங்களின் உளநெருக்கடிக்கான ஆற்றுப்படுத்தல் பணி சிரமமானதாகவே இருப்பதையும் காணலாம். அதே வேளை தகப்பனைக் காணாமல் போன போது தாய்வயிற்றில் இருந்த பிள்ளை இப்போது வளர்ந்து நிற்கிறது. அந்தப் பிள்ளை அப்பாவின் முகத்தை இன்னும் காணவில்லை. அவ்வாறானவர்களின் உளபிரச்னை நீள்கிறது. அதற்கான தொடர் பணிகள் திட்டமிடப்பட வேண்டும்.

M. Salih and G. Samarasinghe (2017) கருத்துப்படி, காணாமல் போன குடும்ப உறுப்பினர்கள், காணாமல் போனவர்கள் பற்றிய படங்கள் மற்றும் செய்தித்தாள் செய்திகளை காட்டி உணர்வுபூர்வமாக பேசினர். அவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கண்டுபிடிக்க ஆழ்ந்த விருப்பத்தையும் ஏக்கத்தையும் வெளிப்படுத்தினர்.

## துணைநூற்பட்டியல்


1. புதுவை அன்பன். (2004, ஜனவரி - யூன்) போராட்ட வாழ்வே அரங்காக..., கட்டியம்:உலகத் தமிழர் ஆய்விதழ், பக் 87-103.
2. தேவானந்த், தே. (2004, பெப்ரவரி, 19) விடுதலைக்கான அரங்கு உண்மையில் ஒன்று அல்ல, ஈழநாதம், பக் 26-28.
3. சிவத்தம்பி, கா. (1995) நாடக ஆக்கமும் அரங்கின் 'அழகியலும்' சமூக மாற்றம் பற்றிய ஆழமான கருத்து நிலைப் பிரச்சினை மையமாக மேற்கிளம்பும் செயல் முனைப்பு நிலை. சிதம்பரநாதன். க, சமூகமாற்றத்துக்கான அரங்கு (இரண்டாம் பதிப்பு)
4. தேவானந்த், தே. (2007) சிறுவர்ளின் கல்வி மேம்பாட்டுக்கான அரங்கு ஊடான உளசமூகப் பணித்திட்டம், துணிவு சிறுவர் நாடகங்கள், கூத்தரங்கம் பக்:07-14.
5. சிவகுமார், த. (2006), ஆற்றுப்படுத்தல் பணியில் அரங்கத்திறன்கள், கூத்தரங்கம் ஜனவரி, 2006 பக் 8-10.
6. ஜெயராசா, சபா. (2005), கலைச் செயற்பாடுகளும் சிறுவர் உளவியலும், வளரும் பயிருக்கு முளையில் உதவும் சிறுவர் அரங்கு, ஓகஸ்ட், 2005 பக் 36-42
7. தேவானந்த், தே. (2007) துணிவு சிறுவர் நாடகங்கள், கூத்தரங்கம் 2007


## REFERENCES


1. Asiama E.K. (2011), “Theatre for development: A methodology for community work”, Journal of Drama.
2. Holman-Jones S (2005) Auto-ethnography: Making the personal political. In: Denzin NK and Lincoln YS (eds) The Sage Handbook of Qualitative Research. Thousand Oaks: Sage, pp.763-790.
3. Ellis C (2000) Creating criteria: An autoethnographic story. Qualitative Inquiry 5: 273 - 277.
4. Carl G. Jung (1964) Man and His Symbols - (Aldus Books, London) p. 20. Deacon 1997, p. 71.
5. Mda, Zakes. 1993. When People Play People: development communication through theatre. Methuen Performing Arts. Vol. 4 No.2 pp. 21-31.
6. Salhi K. (2000), Theatre for Development: An Art for Self Determination, Exeter Publishers, U.K. Theatre in Education Conference, University of Exeter.
7. Salih, M., & Samarasinghe, G. (2017). Families of the missing in Sri Lanka: Psychosocial considerations in transitional justice mechanisms. International Review of the Red Cross, 99(905), 497-517.
8. Thompson, J. (2005, April). Theatre of pain, Theatre of beauty. In Researching Drama and
9. Wilson, E. (1994), The theatre experience (6th ed.), McGraw Hill Inc, New York.

10. World Bank. (1994), Participatory development toolkit, World Bank, Washington.
11. Puthuvai Anpan. (2004E January – June) Struggle is life as theatre... Katiyam: World Tamil Research Journal, pp. 87-103.
12. Thevanayagam, Thevananth. (2004), The arena of liberation is not really one, Eelanatham, pp. 26 - 28.February, 19
13. Sivathamby, k (1995) Drama and the 'Beauty' of the Stage on Social Change: A deep conceptual problem is the above-mentioned propensity to act, Sithamparanathan .K Theatre for Social change (Second Edition)
14. Thevanayagam, Thevananth (2007) A psychosocial framework for children's academic development Syllabus, Thunivu Children's Plays, Auditorium pp: 07 - 14.
15. Sivakumar, T. (2006), Theatre Skills in Counseling, Kooththarangam, Proceedings January, 2006 pp. 8 – 10.
16. Jayarasa, Saba. (2005), Art activities and child psychology, valarumpayirukku mulayil uthavum sirivar arangu, August, 2005 pp 36 - 42
17. Thevanayagam, Thevananth. (2007) Courageous Children's Plays, Kooththarangam 2007